Tamil / தமிழ்

'கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு 2023

இந்த எதிர்வரும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின்

**மூலாதாரத்தைப் பரிசீலிக்கவும்**

# நில்லுங்கள், கவனியுங்கள்

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது, ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்படாததும் சூழ்நிலைக்குத் தொடர்பில்லாததும் அல்லது வேண்டுமென்றே தவறாக வழிநடத்துகின்றதுமான தகவல்களை நீங்கள் காணலாம். சரியான தகவல்களைப் பெற்றிருப்பதாக, தகவல்களை பெறும் போது விமர்சன நோக்கில் அவற்றை அணுகுங்கள் மற்றும் தகவல் துல்லியமானதாகவும் உண்மையானதாகவும் உள்ளதா என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

## தவறான தகவல் தந்திரோபாயங்கள்

தவறான தகவல்கள் என்பன வேண்டுமென்றே பிழையாக வழிநடத்தும் மற்றும் பொதுமக்களின் கருத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட பிழையான தகவல்களாகும், மேலும் தவறான தகவல்கள் தானாகவே பரவுவதில்லை. தவறான தகவலைப் பரப்ப முயற்சிப்பவர்கள், வேண்டுமென்றே உங்களைத் தவறாக வழிநடத்துவதற்குப் பின்வரும் தந்திரோபாயங்கள் சிலவற்றைப் பயன்படுத்தலாம்.

### வெறுமனே கேள்விகள் கேட்பது

வேண்டுமென்றே எந்த ஆதாரத்தையும் கொடுக்காமல், சந்தேகங்களை ஏற்படுத்துவதற்காக ஆட்கள் கேள்விகளைக் கேட்கலாம். கேட்கப்படும் பெரும்பாலான கேள்விகள் சட்டத்திற்கு உட்பட்டவை என்றாலும், மோசமான எண்ணத்தில் அல்லது மிகவும் சாத்தியமில்லாத சூழ்நிலைகளைப் பற்றிக் கேட்கப்படும் கேள்விகளில் கவனமாக இருங்கள். ஏன் இக்கேள்வி கேட்கப்படுகிறது என்பதை சற்று நிதானமாக யோசியுங்கள்.

### உணர்ச்சிபூர்வமான வார்த்தைகள்

கோபம் அல்லது பயம் போன்ற எதிர்மறை உணர்ச்சிகளைத் தூண்டும் வலுவான வார்த்தைப் பிரயோகங்கள் அவை வெகு வேகமாய்ப் பரவுவதை இலகுவாக்கும். வலுவான உணர்ச்சிபூர்வமான மறுமொழி ஒன்றை அளிக்குமாறு உங்களைத் தூண்டக்கூடிய ஒன்றை நீங்கள் கண்டால், சற்று நிதானமாக ஏன் என்று சிந்தியுங்கள்.

### தனது கருத்துக்கு ஆதரவான மேற்கோள்களை மட்டும் காட்டுதல் ('செர்ரி பிக்கிங்')

'ஸ்கிரீன் ஷாட்'கள் அல்லது புள்ளிவிவரங்கள் போன்றவற்றின் மூலமாக அவற்றின் அசல் மூலத்தைக் குறிப்பிடாமல் சூழ்நிலைத் தொடர்பும் இல்லாமல் தகவல்கள் கொடுக்கப்படுவது 'செர்ரி-பிக்கிங்' எனப்படும்.

## வாக்காளர் என்ற வகையில் உங்கள் பங்கு

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புச் சட்டங்கள் தொடர்பாடல்களில் அல்லது விளம்பரங்களில் உண்மைத் தன்மையைக் கட்டுப்படுத்தாது. தகவல்கள் பின்வரும் தன்மையுடையனவா என அறிய நிதானமாக அவற்றைக் கருத்தில் கொள்ளுங்கள்:

### நம்பத்தக்கவை

**அவை நம்பகமான அல்லது அடையாளம் காணக்கூடிய மூலத்திலிருந்து வந்தவையா?**

தகவலின் மூலாதாரம் உங்களுக்குத் தெரியுமா? இது ஒரு அங்கீகாரம் பெற்ற ஊடகம் அல்லது அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கிலிருந்து வந்ததா? உங்களுக்குத் தெரியாவிட்டால், கணக்கு புதிதாக உருவாக்கப்பட்டதா அல்லது வேறு இடுகைகள் அதில் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.

### தற்போதையது

**அது எப்போது வெளியிடப்பட்டது?**

ஒரு இடுகை/கட்டுரை இன்றுதான் பகிரப்பட்டிருந்தாலும் அது நிகழ்காலத்திற்குரியதாகும் என்ற அர்த்தமல்ல. எப்போதும் அசல் மூலாதாரத்தையும் வெளியீட்டுத் திகதியையும் பரிசீலிக்கவும். தற்சமயம் மிகச் சரியானதாக இருக்க முடியாத பழைய பதிவுகள்/கட்டுரைகள் என்பன புதிய தகவல்கள் போல் தோன்றும் விதத்தில் பகிரப் படலாம்.

## AEC யின் பொறுப்பு

'ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையம்' (AEC) கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தும் பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஒரு சுதந்திரமான நிறுவனமாகும். AEC யின் பங்கு:

### கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு முறைமை பற்றிய நம்பத்தகுந்த தகவல்களை வழங்குதல்

வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யும் விதம், வாக்களித்தல் அல்லது ஒரு வேட்பாளராகப் போட்டியிடல் ஆகியன தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான இலகுவான வழிகளை AEC தனது விளம்பரப் பிரச்சாரங்கள், வலைத்தளம், தொடர்பு மையம் மற்றும் சமூக ஊடகக் கணக்குகள் வாயிலாக வழங்குகிறது. இந்த செயல்முறைகளைப் பற்றி ஏதேனும் தவறான தகவல் இருந்தால், AEC அது குறித்த பதிவைச் சரிசெய்யும். இந்த செயல்முறைகளுக்கு வெளியே - வாக்கெடுப்புத் தகவல்தொடர்பின் உண்மைத் தண்மையைச் சரிபார்ப்பதில் AEC -இற்கு எந்தப் பங்கும் இல்லை.

### கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புத் தொடர்பாடல்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரங்களைப் பற்றி விசாரியுங்கள்

தகவல்களின் மூலங்களை அறிந்து கொள்ள உங்களுக்கு உதவ, குறித்த சில தேர்தல் சம்பந்தப்பட்ட தொடர்பாடல்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தேவைகள் உள்ளன.

### 'Yes' மற்றும் 'No' பிரச்சாரச் சாதனங்கள்

உத்தியோகபூர்வ 'Yes' மற்றும் 'No' பிரச்சாரங்களின் தகவல்களைக் கொண்டிருக்கும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புத் துண்டுப்பிரசுரத்தை வெளியிடுவது AEC -இன் பொறுப்பாயினும், இத்தகவல்தொடர்புகளின் உண்மைத்தன்மையை ஒழுங்குபடுத்துவதில் AEC -இற்குப் பங்கு இல்லை.

aec.gov.au/translated 1300 720 153

AEC Australian Electoral Commission

AEC23/1804

கேன்பராவிலுள்ள 'தேர்தல் ஆணையர்' அவர்களால் அதிகாரமளிக்கப்பட்டது
Authorised by the Electoral Commissioner, Canberra